# மிளிர்

## பொங்கல்

இதழ் - 1 தை - 01 2022



## உலகப் பொதுமறை

மயிலையில் பிறந்த குறுகிய பா!

## சொல் வங்கி

வார்த்தைப் பெட்டகம்

## கதை கேளு கதை கேளு

குட்டி குரங்கு அப்புவின் கதை

## பொங்கலோ பொங்கல்

பொங்கல் பாடல்

## புதிரோ புதிர்

www.aramonstream.com

# பொங்கல் பாடல்

வெள்ளை யெல்லாம் அடித்து
வைத்து,
வீட்டை நன்கு மெழுகிவைத்து,

விடியும் போதே குளித்து விட்டு,
விளக்கு ஒன்றை ஏற்றிவைத்து,

கோலமிட்ட பானையதில் கொத்து
மஞ்சள் கட்டி வைத்து,

அந்தப் பானைத் தன்னை தூக்கி
அடுப்பில் வைத்துப் பாலை ஊற்றிப்,

பொங்கிப் பாலும் வருகையிலே
“பொங்கலோ பால்பொங்க” லென்போம்

தேங்கா யோடு, கரும்பும், சோறும்
தெய்வத் துக்குப் படைத்துவைத்து,

ஒன்று சேர்ந்து உண்டிடுவேம்,
ஓடி ஆடி பாடிடுவோம்.

-அழ. வள்ளியப்பா





கற்றது கைமண் அளவு.
கல்லாதது உலகளவு

அன்பார்ந்த பெற்றோர்களே, அருமைக் குழந்தைச் செல்வங்களே! அனைவருக்கும் தைத் திருநாள் நல்வாழ்த்துகளோடு அறம் குழுமம் மிளிர் வாசகர் வட்டத்திற்கு வரவேற்கிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும்!

ஆம்! அறம் செந்தமிழ் குழுமத்திற்கும் பிறந்து இருக்கிறது ஓர் இணைய வழி. www.aramonstream.com.

மிளிர் என்றால் அழகு. நம் குழந்தைகள் படிக்கும் மழலை தமிழும் அழகே. அவ்வழகை மேலும் மேம்படுத்த எடுத்த முயற்சியே மிளிர்.

குழந்தைகளுக்கான கதைகள், பாடல்கள், புதிர்கள், பொது தகவல்கள், மாணவர் பக்கம் மற்றும் பல சிறப்புகளோடு மிளிர் உங்கள் வீடு தேடி மாதம் தோறும் வரவிருக்கின்றது. தைத் திருநாளை வரவேற்கும் நீங்கள் மிளிர் இதழையும் கோலாகலத்துடன் வரவேற்க விரும்புகிறோம். மிளிர் தங்கள் இல்லம் தேடி வர எங்களை aram.senthamizh@gmail.com என்ற இனைய முகவரியில் அணுகவும்.

-அறம்




# அகரம்



_கல்



_ரவம்






_டிசில்




_த்தம்




_



_ளரி




_கம்




_ழி



# அகரம்





# குறளான குறுகிய பா



என்ன யோசனை கணவரே!
ஒரு நீதி நூல் எழுதலாம் என்று இருக்கிறேன். அதான் யோசனை
எழுதுங்கள் ஆனால் கொஞ்சம் வித்தியாசமாக எழுதுங்கள் நாட்டில் நீதி நூல்கள் பல உள்ளன. அவற்றை யாரும் படிப்பதில்லை
அதனால்தான் ஒன்றே முக்கால் அடி நீளத்தில் இருக்கும்படி எழுதலாம் என்று நினைக்கிறேன.
சரிதான்! குறுகிய பா என்றால் படிக்கத் தூண்டுவதாக இருக்கும்
என்ன சொன்னாய்? குறுகிய பா! அருமையான சொல் என் நூலுக்குக் குறள் என்றே பெயர் வைத்து விடுகிறேன்
திருக்குறள் என்று வையுங்கள் மங்களகரமாக இருக்கும்
சரியான பெயர் செய்யுளின் நீளத்தை குறைத்து ஆழமான பொருள் இருக்கும்படி அமைக்கப் போகிறேன்
அப்டியானால் திருக்குறள் என்பது மிகப் பொருத்தமான பெயர்

# திருக்குறள் கதைகள்


அப்படியானால் நூலை வடிவமைத்து விட்டீர்கள் என்று சொல்லுங்கள்
ஆமாம்.. என்னென்ன தலைப்புகளைப் பற்றி எழுத வேண்டும் என்று சிந்தித்தேன்.
133 தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை இந்த ஓலைச் சுவடியில் குறித்து வைத்திருக்கிறேன்
என்னிடம் சொல்லவேயில்லையே!
உன் ஆலோசனை எனக்கு பல சந்தர்ப்பங்களில் தேவைப்படும். முதல் குறளை எழுதுவதில் சிறு குழப்பம். அதற்கு நீதான் உதவ வேண்டும்
அதில் என்ன குழப்பம்
குறள் கடவுளைப் பற்றித்தானே?
எந்த கடவுளை வாழ்த்திப பாடுவது என்ற குழப்பமா?
-குறள் வளரும்

# அறிவியல் உலகம்

## அணுக்கள்:



சில வகை ஆற்றல்கள் ஏற்ற-இறக்க அலைகள் போன்ற வடிவத்தில் இருக்கின்றன. ஒலி மற்றும் ஒளி ஆகியன இவ்வகை ஆற்றல்களின் அடங்கும். ஆனால் இந்த அலைகளின் இயல்பு மிகவும் வேறுபட்டது. ஒலி என்பது நகரும் அணுக்கள் மற்றும் மூலக்கூறுகள் ஆகும். ஒளி என்பது மின்சாரமும் காந்தமும் சேர்ந்தது. இரண்டும் உடலால் உணரக் கூடியது. அதே சமயம் தகவலை அனுப்பவும் பயன்படக் கூடியது.

## பெருங்கடலின் ஒலிகள்:


நீரில் ஒலியானது ஒரு விநாடிக்கு 1430 மீட்டர்கள் வேகத்தில் பயணிக்கிறது. இது காற்றில் பயணிப்பதை விட ஐந்து மடங்கு அதிகமாகும். பல நீர்-வாழ் விலங்குகள் தொடர்பியலுக்கு ஒலிகளைப் பயன்படுத்துகின்றன. மிகப்பெரிய திமிங்கலங்கள் உண்டாக்கும் அடர்த்தியான அல்லது குறை அதிர்வெண் அழைப்புகள் கடல்களின் வழி நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் பயணம் செய்கின்றன.ஆண் கூன்முதுகு திமிங்கலங்கள் பெண் திமிங்கலங்களை ஈர்பதற்குப் பாடுகின்றன. ஒவ்வொரு திமிங்கலமும் தனக்குரிய சொந்தப் பாடலை மணிக்கணக்கில் சிறிய வித்தியாசங்களோடு திரும்பத் திரும்பப் பாடுகின்றன. தாய் மற்றும் குட்டித் திமிங்கலங்கள் கிளிக் மற்றும் கிரீச் ஒலிகளை எழுப்புகின்றன.

## பூக்கள் மீது புறஊதாக் கதிர்கள்:



பூவின் இதழ்கள் மீது தேன் வழிகாட்டி எனப்படும் கோடுகளைத் தேனீக்கள் பார்கின்றன. இந்தக் கோடுகள் புற ஊதாக் கதிர் ஒளியில் மட்டுமே தெரியும். பூவின் நடுவில் உள்ள தேனுக்குச் செல்ல தேனிக்கு அவை வழிகாட்டுகின்றன.

## வளர்வதற்காக ஒளி:





தாவரங்கள் ஒளியில் உள்ள ஆற்றலைப் பயன்படுத்தி தனக்கான உணவைத் தயாரிக்கின்றன. ஒளிபடாமல் தாவரங்கள் வைக்கப்பட்டால் என்ன நிகழும்? யோசித்து விடை கூறுங்கள். விடை அடுத்த இதழில்.



# எங்களை கண்டுபிடித்து வட்டமிட்டு எழுதவும்





________



________



________



________



________



________



________



________



________



________

# புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டி மகிழுங்கள்



# விடுகதைகள்

1. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?

2. யாரும் எரமுடியாத மரம், கிளைகள் இல்லாத மரம். அது என்ன?

3. உணவு கொடுத்தால் வளரும். நீர் கொடுத்தால் அழியும். அது என்ன?

4. ஒளி கொடுக்கும் விளக்கு அல்ல, சூடு கொடுக்கும் தீ அல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல, அது என்ன?

5. கூரை வீட்டைப் பிரிச்சா ஓட்டு வீடு! ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை! வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம்! அது என்ன?

6. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்?

7. தாய் குப்பையிலே, மகள் சந்தையிலே அவை என்ன?

8. சட்டையைக் கழற்றினால் சத்துணவு அது என்ன?

9. அக்கா விதைத்த முத்து, அள்ள முடியாத முத்து, அது என்ன?

10. நாலு மூலைக்கினறு, நாகரத்தினக்கிணறு, எட்டி பார்த்தால் சொட்டுத் தண்ணீர் இல்லை, அது என்ன?



1. கரும்பு 2. வாழைமரம் 3. நெருப்பு 4. சூரயைன் 5. தேங்காய

6. மஞ்சள் 7. நெல் 8. வாழை 9. கோலம் 10. அச்சு வெல்லம்

# திருநாளோ இது உழவர் திருநாள்!



அடுக்களைக்கும், வாசற்கதவிற்கும் நிமிடத்திற்கு ஒரு முறை நடந்தே இருந்தாள் காமாட்சி. அறுபது வயதை கடந்திருந்த காமாட்சிக்கு இன்று முழங்கால் வலி எல்லாம் தெரியவே இல்லை. வெளிநாட்டில் இருந்து தன் மகன் குடும்பத்தினரின் வருகையால் அவளின் ஆர்வத்திற்கு துள்ளலுக்குமான காரணம்.

எழுபது வயதை கடந்த சிவநேசன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்தபடி தன் மனைவியையே கவனித்து கொண்டு இருந்தார்.

"காமாட்சி, ஏன் இப்படி குட்டி போட்ட பூனை மாதிரி அங்கேயும் இங்கேயும் நடந்துக்கிட்டே இருக்க. இங்கே வந்து சிறிது நேரம் உட்காரு." என்றார் சிவநேசன்.

"மூன்று வருடம் ஆச்சுங்க, நம்ம பையன் கதிரவனை பார்த்து. பேர பசங்க ஆதினியும், இளமாறனும் வளர்ந்து இருப்பாங்க." என்று கூறிக்கொண்டே அடுக்களைக்கு சென்று அடுப்பை அணைத்து விட்டு வெளியே சென்று திண்ணையில் அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் வீட்டின் முன் வெள்ளை நிற கார் ஒன்று வந்து நின்றது. மகிழ்ச்சி பொங்க, கரைத்து வைத்து இருந்த ஆலந்ததட்டை கையில் எடுத்தாள் காமாட்சி. ஆதினியும் இளமாறனும் முதலில் இறங்கி பாட்டி என்று அழைத்துக்கொண்டு ஓடி வந்து காமாட்சியின் கால்களை கட்டி பிடித்துக் கொண்டார்கள்.

ஆதினி " நல்லா இருக்கீங்களா பாட்டி"
காமாட்சி "நான் நல்லா இருக்கேன் தங்கங்களா. சற்று நில்லுங்கள் ஆரத்தி எடுக்கலாம்"

அதற்குள் கதிரவனும் தாமரையும் காரை விட்டு இறங்கி வந்திருந்தார்கள். காமாட்சி ஆரத்தி எடுத்துவிட்டு, அனைவரின் நெற்றியிலும் திலகம் இட்டு, உள்ளே செல்லுங்கள் என்று கூறி, ஆலத்தை வாசலில் ஊற்றி விட்டு தானும் உள்ளே சென்றாள்.

சிவநேசன் " வா பா கதிரவா. பயணம் எப்படி இருந்தது? வழியில் எதுவும் தொந்தரவு இல்லையே?"
கதிரவன் "அதெல்லாம் இல்ல பா. பயண களைப்பு தான் கொஞ்சம் இருக்கு"
சிவநேசன் "வா மா தாமரை. எல்லாரும் போய் குளிச்சிட்டு வாங்க"
தாமரை "சரிங்க மாமா.."

அனைவரும் குளிக்க சென்ற நேரத்தில், இரவு உணவை தயாராக எடுத்து வைத்தாள் காமாட்சி. சற்று நேரத்தில் அனைவரும் உணவு அருந்திவிட்டு, மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.



நான்கு வயதாகும் இளமாறன் தனது பாட்டியின் மடியில் அமர்ந்து கொண்டு அங்கிருந்த ஒரு பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

எட்டு வயதை கடந்த ஆதினி, அவளது தாத்தாவின் அருகில் அமர்ந்து, பெரியவர்கள் பேசுவதை கூர்ந்து கவனித்து கொண்டிருந்தாள்.

கதிரவன் " நெல் அறுவடை எல்லாம் முடிந்திருக்கும் அல்லவா?"
சிவநேசன் "கிட்டத்தட்ட முடிந்தது. இன்னும் ஓரிரு நாளில் முழுதாக முடிந்துவிடும்."

"வீட்டிற்கு வெள்ளை எல்லாம் அடித்து முடித்தாகி விட்டது போல இருக்கே" என்றாள் தாமரை.
காமாட்சி "எல்லா வேலைகளும் ஆச்சு மா தாமரை. நாளை போகியை சிறப்பாக ஆரம்பிக்கலாம்"

அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த ஆதினி "போகி, நெல் அறுவடை, பொங்கல், வீட்டிற்கு வெள்ளை, இதெல்லாம் என்ன? எதற்கு? எனக்கு சொல்லுங்களேன் பாட்டி" என்று காமாட்சியிடம் கேட்டாள்.
காமாட்சி "அதற்கென்ன, சொல்கிறேன் கேள்"



"நெல் அறுவடை ஆகும் மாதம் தை மாதம். ஆகையால் தை மாதம் முதலாம் தேதி, நாம் பொங்கல் பண்டிகையை கொண்டாடுகிறோம். பொங்கலுக்கு முதல் நாள் போகி. போகி அன்று வீட்டை சுத்தம் செய்து, வெள்ளை அடித்து, வீட்டில் இருக்கும் பழைய தேவையற்ற பொருட்களை எல்லாம் எரித்துவிட்டு, பின் வேப்பிலை, ஆவாரம் பூ, பூலாப்பூ இவைகளை சேர்த்து காப்பு கட்டி, பொங்கல் தினத்தை வரவேற்போம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்று கூறி முடித்தாள் காமாட்சி.
"பனி அதிகமா இருக்கு. வாங்க எல்லாரும் கீழே போகலாம்" என்று கூறியபடி எழுந்து நடந்தாள் தாமரை.
"அம்மா... தங்கச்சி தமிழினி எப்போ வராத சொன்னா?" என்று கேட்ட கதிரவனுக்கு "மாட்டு பொங்கல் அன்று வருவதாக கூறினாள்" காமாட்சி.
"அத்தை வராங்களா! அப்படினா எங்க கூட விளையாட தென்றலும் மகிழனும் வராங்கன்னு சொல்லுங்க!!" கை தட்டியபடி மகிழ்ச்சியில் குதித்தாள் ஆதினி.
பேசிகொண்டே எல்லோரும் வீட்டிற்குள் வந்து அமர்ந்தார்கள்.

காமாட்சி குழந்தைகளுக்கு பால் கொண்டு வந்து கொடுத்தாள். பாலை அருந்தியபடியே இளமாறன் "பொங்கல் அன்னிக்கு பொங்கல் செஞ்சி சாப்பிடுவோமா" என்றான்.
ஆமா டா என் செல்லம் என்று கூறியபடி பெரும்பொங்கல் பற்றி கூற தொடங்கினாள் காமாட்சி.

"உழவர்களுக்கு நன்றி சொல்லும் விதமாக, தை மாதம் முதல் நாள் பெரும்பொங்கல் கொண்டாடுகிறோம். புத்தாடை அணிந்து, வாசலில் கோலம் இட்டு, அதன் அருகே அடுப்பு வைத்து, புதுப்பானையில் கோலம் இட்டு, மஞ்சள் செடியை கட்டி, பச்சரிசி, அச்சுவெல்லம் எல்லாம் சேர்த்து பொங்கல் சமைத்து, கரும்பு, பழம், தேங்காய் அனைத்தையும் படைத்து, இயற்கைக்கும் உழவர்களுக்கும் நன்றி சொல்வோம். பிறகு அனைவரும் சேர்த்து பொங்கல் சாப்பிட்டு மகிழ்வோம்." என்று பொங்கல் திருநாளை விவரித்து முடித்தாள் காமாட்சி.



"புத்தாடை அணிந்து கொள்ள வேண்டுமா?அம்மா எங்களுக்கு புதிய ஆடைகள் வாங்கி வந்தீர்களா?" என்று தன் அம்மாவிடம் கேட்டான் இளமாறன்.
"உங்களுக்கு புது துணி நாங்க எடுத்து வச்சி இருக்கோம் கண்ணுங்களா" என்று கூறியபடி இளமாறனை தூக்கி தன் மடியில் அமர்த்தினார் சிவநேசன்.

"மூன்றாம் நாள் மாட்டு பொங்கல்" என்று ஆரம்பித்தார் சிவநேசன்.
"பொங்கல் செய்து மாடுகளுக்கு கொடுத்து, கால்நடைகளுக்கு நன்றி சொல்வது தானே மாட்டு பொங்கல்" என்று ஆதினி தான் ஊகித்தது சரியாக தான் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் அவளது தாத்தாவை பார்த்தாள்.


"என் பேத்தி மிகவும் கெட்டிக்காரி" என்று அவள் கன்னத்தை செல்லமாக கிள்ளினார் சிவநேசன்.
நான்காம் நாள் என்னவாக இருக்கும் என்று ஆர்வத்துடன் தனது தாத்தா பாட்டியை பார்த்தார்கள் சிறுவர்கள்.
"கடைசி நாள் காணும் பொங்கல். அன்று அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்பே பொங்கல் சமைத்து விட வேண்டும். சூரியன் உதயமாகும் பொழுது அதை சூரியனுக்கு படைத்து, நன்றி சொல்லும் நாள் தான் காணும் பொங்கல்." என்றார் சிவநேசன்.

இளமாறன் "சூரியனுக்கு எதற்கு நன்றி சொல்ல வேண்டும்"
கதிரவன் "சூரிய ஒளி இல்லையென்றால் பூமியில் உயிரினங்கள் வாழ முடியாது. ஆகையால் சூரியனுக்கு நன்றி சொல்கிறோம்"
"நேரம் ஆகிவிட்டது வாங்க போய் தூங்கலாம்" என்றபடி இளமாரனை தூக்கி இடுப்பில் அமர்த்தி, ஆதினியையும் கூட்டி கொண்டு படுக்கை அறைக்கு சென்றாள் காமாட்சி.
மிகுந்த எதிர்பார்ப்புடனும், பொங்கல் பண்டிகையை கொண்டாட போகும் ஆர்வத்துடனும், பிள்ளைகள் இருவரும் கண் உறங்கினார்கள்.

# ஒரு குட்டி கதை

ஒரு பெரிய காட்டில் நிறைய குரங்குகள் வாழ்ந்து வந்தன. அக்காட்டில் நிறைய பழ மரங்கள் இருந்ததால் அவை அனைத்தும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. ஆனால் குப்பு குரங்கு மட்டும் மகிழ்ச்சியாக இல்லை.







அதற்கு இந்த காட்டில் இருக்கும் பழங்களை விட தூரத்தில் இருந்த பரம்பல் காடுகளில் இருக்கும் செர்ரி பழங்களை எப்போதும் ருசித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற பேராசை. இந்த எண்ணத்தால் குரங்குகளுடன் சேராமல், பரம்பல் காட்டிற்குப் போவதை பற்றியே சிந்தனை செய்து கொண்டிருக்கும்.




ஒரு நாள் தனியாகவே அந்த காட்டிற்குச் சென்றது. செர்ரி மரத்தை பார்த்ததும் அதற்கு ஏக மகிழ்ச்சி.
உடனே மரத்தின் மீது தாவிக்கொண்டது. ஆசை தீர பழங்களை தின்றது, இரவு வரத்தொடங்கியதும் தன் சொந்தங்களுடன் போய் சேர விரும்பியது. மரத்தில் இருந்து இறங்கி தனது காட்டிற்கு நடை போட்டது.






நடைபாதையில் ஒரு கண்ணாடிக் குவளையைக் கண்டது ..என்னவாக இருக்கும் என குப்பு சிந்திக்க ஆரம்பித்தது. நமக்கு எதற்கு சிந்தனை குவளையை உற்றுப் பார்த்தால் தெரிந்துவிடப்போடகிறது என தீர்மானித்து குவளையை கையில் எடுத்து குவளையின் உள் உற்றுப் பார்த்தது...







# குட்டி கதை / கதை கேளு கதை கேளு



அட... செர்ரி பழங்கள்... குவளையை நம் காட்டிற்கு எடுத்து சென்று நண்பர்களுடன் சேர்ந்து சாப்பிடுவோமா? இல்லை இங்கேயே சாப்பிடுவோமா? ம்ம்ம்ம்... நண்பர்களுக்கு எதற்கு? நாம் இதை அனைத்தையும் இங்கேயே சாப்பிட்டுச் செல்வோம் என முடிவு செய்தது





குடுவைக்குள் ஆசை, ஆசையாக கையை விட்டது. கை நிறைய செர்ரி பழங்களை அல்லிக்கொண்டு கையை வெளியே எடுக்கப்பார்த்தது... கையை மடக்கிக் கொண்டு அதனால் குடுவையிலிருந்து வெளியே எடுக்கமுடியவில்லை. மீண்டும் மீண்டும் அதன் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. தொடர் தொல்விக்குப் பிறகு




செர்ரி பழங்களை விடுத்து வெறும் கையை வெளியே எடுக்க அது விரும்பவில்லை. இரவு முழுவதும் முயற்சித்துக் கொண்டே இருந்தது. அதிகாலையில் அப்பு களைப்பு தாங்காமல் தூங்கிவிட்டது. சிறிது நேரம் கழித்து கண் விழித்து பார்த்த அப்புவிற்கு அதிர்ச்சி தாழவில்லை. காரணம் அது ஒரு கூண்டுக்குள் இருந்தது.





இருப்பினும், தன் கையில் இன்னும் செர்ரி பழங்கள் நிறைந்த குடுவை இருப்பதை பார்த்தவுடன் கொஞ்சம் ஆறுதல் அடைந்தது. அப்பு எப்படி யோசிக்கும் என நங்கு அறிந்த வேடன் வைத்த பொறி தான் அந்த குடுவை. அப்புவின் கையை ஓங்கி தட்டிவிட்டு குடுவையை





பிடுங்கும் போது தான் அப்புவிற்கு எல்லாம் புரிந்தது. அப்பு ஒரு வழியாக குடுவையை விட்டு கையை எடுத்துவிட்டது ஆனால் வேடனின் கூண்டில் சிக்கிக்கொண்டது. ஐயோ பாவம் அப்பு இல்லையா குழந்தைகளே!

**கருத்து: பேராசை பெரும் நஷ்டம்.**



# சொற்களஞ்சியம்




1.) கரும்__லகை

2.) மா__க்கர்

3.) தி__

4.) ஆ__ரியர்

5.) ஒளிப்பட __ட்டி

6.) மே__

7.) நா__காலி

8.) புத்__க அலமாரி


9.) உலக __ருண்டை

10.) கடி__ரம்


11.) ஒ__நாடாக்கருவி

12.) உலக __ரைபடம்

13.) அறிக்கை __லகை


14.) து__வி 

15.) க__னி/ க__ப்பொறி

16.) சுண்ணாம்பு __ட்டி 

17.) அ__ப்பான் 

18.) எழுதுகோல் __னா 

19.) __றியீட்டு பேனா 


20.) பாடப்__த்தகம்

21.) பணிப்__த்தகம்

22.) குறிப்__டு

23.) கா__தம்

24.) பக்__ங்கள்

25.) வரை__ல் 

26.) அ__ராதி

27.) எ__த்துகள்

28.) __ண்கள்

-விடை கடைசிபக்கம்



# மாணவர் பக்கம்



ஷிபில், 5, மும்பை

### பக்கம் 9 விடைகள்

1. சங்கு
2. ஆந்தை
3. படகு
4. எலி
5. நத்தை
6. தவளை
7. ஒட்டகம்
8. ஆமை
9. நட்சத்திர மீன்
10. குழந்தை




சான்வி காசிவிஸ்வநாதன், 4, டெக்சாஸ்

*The Perfect Tamil online classroom for children*

*We are training National and International children to read, write and speak Tamil.*

*contact us @ aram.senthamizh@gmail.com*

அறம்

www.facebook.com/100070376785366

www.instagram.com/aramsenthamizh

www.aramonstream.com